பூரண நிலவினிலே
உந்தன் புன்னகை கண்டேன் அம்மா தேவீ

ஆரண முடிவே வா ஆனந்த வடிவே வா
ஆழிசூர் உலகங்கள் ஆண்டிட வந்தாளே ( பூரண )

முக்கடல் மூலையிலே மோன அமைதி தன்னில்
சிக்கென பிடித்தேன் சிரித்தனன் சடவுடல்
முப்புனல் அலை வீசும்
பவக்கடல் தன்னை தாண்ட
தக்கத் தோணியடி தாய் நின் திருவடி

செக்கச்சிவந்த செங்கதிர் வானம்
மிக்கச்சிறந்த ஓம் ஒலி அலைகள்
பக்கற்றிருந்த பண்பிசை ஒலிகள்
நோக்கிச் சிரிக்கும் நித்திய குமரி ( பூரண )